பக்கங்கள்: 08

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 08 வள்ளுவர் ஆண்டு 2056 புரட்டாதி 22 புதன்கிழமை 08.10.2025 கதிர் 332

**இது ரகசியம் அல்ல!**

இன்றைக்கு ஒரு விழிப்புணர்வுப் பதிவு. அதிலும் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவை தனது 60ஆவது அமர்வில் இலங்கை தொடர்பான தீர்மானத்தை ☞2

## போர்க் குற்றங்களை இலங்கை அரசு தனது சட்டங்களில் சேர்க்கவேண்டும்

### ஐ.நா. வலியுறுத்து

போர்க்குற்றங்கள்மற்றும்மனிதகுலத்திற்கு எதிரான குற்றங்களை அதன் சட்டத்தில் சேர்ப்பதற்கும் இலங்கை அரசு நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று வலுக்கட்டாயமாக காணாமல் போனவர்கள் தொடர்பான ஐ.நா. குழு (CED), அதன் சமீபத்திய அமர்வின் இறுதியில் வலியுறுத்தியுள்ளது.

பலவந்தமாகக்காணாமலாக்கப்பட்டவர்கள் தொடர்பில் ஜெனிவாவில் நடந்த ஐ.நா. கூட்டத்திற்குப்பின்னர்இலங்கைதொடர்பில்அது விடுத்த அறிக்கையில்தெரிவிக்கப்பட்டதாவது:

காணாமல் போனவர்களின் விரிவான பதிவேடு இல்லாதது மற்றும் அவர்களின் கதி மற்றும் இருப்பிடத்தை தெளிவுபடுத்துவதில் மட்டுப்படுத்தப்பட்ட முன்னேற்றம் என்பன குறித்து குழு கவலை தெரிவித்தது, ☞2

## தாஜுதீன் கொல்லப்பட்டபோது கஜ்ஜா பாதுகாப்பு அமைச்சில் பணியாற்றினார்

### சிஐடி தரப்பில் தகவல்

வாசிம் தாஜுதீன் கொலை நடந்தபோது, மீகசரே கஜ்ஜா என்று அறியப்படும் பிரபல பாதாள உலகத் தலைவரான அனுர விதானகமகே பாதுகாப்பு அமைச்சில் பணியாற்றி வந்தார் என்ற உண்மையை குற்றப் புலனாய்வுத் திணைக்களம் (சிஐடி) வெளிப்படுத்தியுள்ளது.

தனது இரண்டு குழந்தைகளுடன் கொடூரமாகக் கொல்லப்பட்ட கஜ்ஜா தாஜுதீன் கொலை செய்யப்படுவதற்கு முன்னதாக அவரைப் பின்தொடர்ந்து சென்ற வாகனத்தில் இருந்தவர் என்று நம்பப்படுகிறவர்.

இலங்கையின்தீர்க்கப்படாதகொலைகளில் ஒன்றாகத் தொடரும் தாஜுதீனின் ☞2

## ஐஸ் போதைப் பொருளுடன் பொலிஸ் அதிகாரி கைது

### முல்லைத்தீவில் நேற்றுச் சம்பவம்

முல்லைத்தீவு மாவட்டத்தின் மாங்குளம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கொக்காவில் பகுதியில், ஒரு பொலிஸ் அதிகாரி ஐஸ் போதைப்பொருளுடன் கைது செய்யப்பட்டுள்ளார்.

592ஆவது இராணுவபடைப்பிரிவின்கீழ் உள்ள இராணுவ புலனாய்வு பிரிவினருக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலுக்கு அமைவாக, ஏ-9 வீதியின் கொக்காவில் பகுதியில் நேற்றுக் காலை விசேட அதிரடிப் படையினரால்கைது செய்யப்பட்டார். பின்னர் அவர் மாங்குளம் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டார்.

கைது செய்யப்பட்டபோது அவரிடம் 92 கிராம் 400 மில்லிகிராம் ஐஸ் போதைப்பொருளை இருந்தது என்று அதிகாரிகள் கூறுகின்றனர். மாங்குளம் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

ஒட்டுசுட்டான் பொலிஸ் நிலையத்தில் போக்குவரத்து பொலிஸ் பொறுப்பதிகாரியாக இருந்த சந்தேகநபர் அண்மையில்தான் மணலாறு பொலிஸ் நிலையத்திற்கு ☞2

## இலங்கை செலுத்த வேண்டியது

# 37 பில்லியன் டொலர் வெளிநாட்டுக் கடன்

### உள்நாட்டில் மேலும் 20 ட்ரில்லியன் ரூபாய் கடன்

**இலங்கை இன்னும் 37 பில்லியன் அமெரிக்க டாலர் மதிப்புள்ள வெளிநாட்டுக் கடன்களையும்,மொத்தம்ரூ.19.6டிரில்லியன் மதிப்புள்ள உள்நாட்டுக் கடன்களையும் திருப்பிச்செலுத்தவேண்டியுள்ளதாகஅரசுக் கடன் மேலாண்மை அலுவலகம் பொது நிதிக் குழுவிடம் (CoPF) தெரிவித்துள்ளது.**

**இலங்கைபெற்றுள்ளவெளிநாட்டுமற்றும் உள்நாட்டுக் கடன்களின் தற்போதைய தொகைகள் குறித்து விவாதிக்க கோப் குழு முன் அழைக்கப்பட்டபோது மாநில கடன் மேலாண்மை அலுவலக அதிகாரிகள் இதை வெளிப்படுத்தினர்.**

**இந்த ஆண்டு செலுத்த வேண்டிய** ☞2

## என்னை அச்சுறுத்தி அடிபணிய வைக்க முடியாது

### உதய கம்மன்பில தெரிவிப்பு

இலஞ்ச, ஊழல் ஒழிப்பு விசாரணை ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகம் ரங்க திஸாநாயக்க எனக்கு எச்சரிக்கை விடுத்திருக்கின்றார். குறித்த பதவியை வகிப்பதற்கான அடிப்படை தகுதியைக் கூட பூர்த்தி செய்யாத அவரது அச்சுறுத்தலால் என்னை ஒருபோதும் மௌனிக்கச் செய்ய முடியாது. அவரது தகுதிகளை நான் நிரூபிக்க முன்னர் அவர் தானாகவே பதவியை இராஜிநாமா செய்வதே சிறந்தது என பிவிதுரு ஹெல உருமயவின் தலைவர் உதய கம்மன்பில தெரிவித்தார்.

கொழும்பிலுள்ள கட்சித் தலைமையகத்தில் நேற்றுச் செய்தியாளர்களிடம் பேசிய அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஒக்டோபர் 2 இலஞ்ச, ஊழல் ஒழிப்பு விசாரணை ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகம் ரங்க திஸாநாயக்க செய்தியாளர்கள்சந்திப்பில், நான்அவருக்கு எதிராக ஊடகங்கள் முன்னிலையில் கருத்து வெளியிட்டால் ஊழல் ஒழிப்பு சட்டத்தின் 118ஆம் உறுப்புரைக்கமைய ஆணைக்குழுவை விமர்சித்தாகக் கருதி சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என எச்சரித்துள்ளார்.

அவர் இலஞ்ச, ஊழல் ஒழிப்பு விசாரணை ஆணைக்குழுவின் பணிப்பாளராகப் பதவி வகித்தாலும் அதற்கு அவருக்குப் போதிய அறிவு ☞2

## சோதனையின்றி விடுவிக்கப்பட்ட கொள்கலன்கள் பற்றி ஆராய நாடாளுமன்ற தெரிவுக் குழு தேவை

### சபாநாயகரிடம் எதிர்க் கட்சிகள் வலியுறுத்து

கொழும்பு துறைமுகத்தில் இருந்து 323 கொள்கலன்கள் பரிசோதனைக்கு உட்படுத்தப்படாமல் விடுவிக்கப்பட்ட சர்ச்சைக்குரிய விவகாரத்தை விசாரிக்க ஒரு நாடாளுமன்றத் தெரிவுக் குழுவை நியமிக்குமா எதிர்க் கட்சிகள் சபாநாயகரிடம் வலியுறுத்தியுள்ளன. இதற்கான கோரிக்கையை எழுத்துமூலமனுவாக நேற்று எதிர்க்கட்சிகளின் பிரதிநிதிகள் சபாநாயகரிடம் கையளித்தனர்.

கொள்கலன்களை ஒழுங்கற்ற முறையில் விடுவிப்பது 'தேசிய பாதுகாப்பு, வருவாய் வசூல் மற்றும் பொது பாதுகாப்புக்கு கடுமையான ஆபத்துகளை' ஏற்படுத்துகிறது என்று இந்தக் கோரிக்கை குறிப்பிடுகிறது, இது அரசுத் தலைவரின் அறிவுறுத்தலின் பேரில் கருவூலச் செயலாளரால் நியமிக்கப்பட்ட விசாரணைக் குழுவின் அறிக்கையிலும் காணப்பட்டது.

சுங்க விதிமுறைகளை மீறுவதாகக் கூறப்படும் ஊடக அறிக்கைகளை முன்னிலைப்படுத்தி இந்த விசாரணை நடத்தப்பட்டது. எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களின் கூற்றுப்படி, ஒழுங்கற்ற செயல்முறை காரணமாக விடுவிக்கப்பட்ட கொள்கலன்களின் உள்ளடக்கங்களுக்கு பொறுப்பேற்க முடியாது என்று இலங்கை சுங்க அதிகாரிகள் சங்கம் பகிரங்கமாகக் கூறியுள்ளது. இத்தகைய குறைபாடுகள் போதைப்பொருள், துப்பாக்கிகள் அல்லது பிற தடைசெய்யப்பட்ட பொருட்களை நாட்டிற்குள் கடத்துவதற்கு வழிவகுத்திருக்கலாம் என்ற கவலையும் எழுப்பப்பட்டுள்ளது.

சமீபத்தில் பெரிய அளவிலான போதைப்பொருள் கண்டறிதல்கள் மற்றும் சட்டவிரோத துப்பாக்கிகள் சம்பந்தப்பட்ட சம்பவங்களை மேற்கோள் காட்டி, இந்த ☞2

## நாணய நிதியத்துடன் அநுர நேற்று சந்திப்பு

### 5ஆவது மீளாய்வுக் கலந்துரையாடல்

அரசுத் தலைவருக்கும் சர்வதேச நாணய நிதியத்தின் பிரதிநிதிகளுக்கும் இடையிலான கலந்துரையாடல் நேற்று அரசுத் தலைவர் செயலகத்தில் இடம்பெற்றது.

கடன்மறுசீரமைப்புசெயல்பாட்டில்சர்வதேச நாணய நிதியத்தின் ஆறாவது தவணையை வழங்குவதற்கு முன்னதாக நடத்தப்படும் ஐந்தாவது மீளாய்வின் இடைக்காலக் கலந்துரையாடலாக இது நடத்தப்பட்டது.

பொருளாதார ரீதியாக வங்குரோத்து நிலையிலிருந்தநாட்டை, அதிலிருந்துவிடுவித்து அபிவிருத்தியை நோக்கி இட்டுச் செல்வதே ஆளும்தரப்பின்முக்கியநோக்கமாகும்என்றும், இதற்காக ஆளும்தரப்பிடம் மூலோபாயத்திட்டம் இருப்பதாகவும் அரசுத் தலைவர் அநுரகுமார இங்கு தெரிவித்தார் என்று அவரது அலுவலக செய்திக் குறிப்புத் தெரிவித்தது.

பொருளாதார மறுமலர்ச்சியை அடையக்கூடிய நாடாக இந்த நாட்டை அபிவிருத்தி செய்வதற்கு, சர்வதேச நாணய நிதியம் நிர்ணயித்த இலக்குகளைத் தாண்டிச் செல்ல வேண்டியதன் அவசியத்தை ஆளும்தரப்பு இனங்கண்டுள்ளதாகவும், அதற்காக ஆளும்தரப்பு முறையான திட்டத்தை வகுத்துள்ளதாகவும் அரசுத் தலைவர் சுட்டிக்காட்டினார். ☞2

### மிளகாய்த் தூளாக இருக்குமோ என நினைத்து

## சிவப்பு நிறமான தூளை ருசி பார்த்த 7 மாணவர்கள் வைத்தியசாலையில்

தம்புள்ளையில் உள்ள ஒரு பள்ளியைச் சேர்ந்த 7 ஆம் வகுப்பு மாணவர்கள் ஏழு பேர் இரசாயனப் பொருளால் ஏற்பட்ட பாதிப்புக் காரணமாக மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர். மிளகாய்த் தூளா என ஆய்வுகூடத்திலிருந்த சிவப்பு நிறத் தூளை ருசித்துப் பார்த்ததனால் அவர்கள் பாதிக்கப்பட்டனர் என்று கூறப்படுகின்றது.

பாதிக்கப்பட்ட மாணவர்களில் ஐந்து ஆண் மாணவர்களும் இரண்டு பெண் மாணவர்களும் அடங்குவர்.

பாடசாலை வார விடுமுறை நாட்களில், குரங்குகள் பாடசாலை அறிவியல் ஆய்வகத்திற்குள் நுழைந்து சேதம் விளைவித்துள்ளன. நேற்று பாடசாலை மீண்டும் தொடங்கியபோது, ☞2

## இனி இது .....

நிறைவேற்றியிருக்கும் நிலையில் இந்தப் பதிவு பொருத்தமானது. மருத்துவர் முரளி வல்லிபுரநாதன் தனது முகப் புத்தகத்தில் பதிந்த கருத்துக்களையே நான் உங்களுக்கு அப்படியே தரப் போகின்றேன்.

'' அதிமுக்கிய அவசர எச்சரிக்கை: போலி ஐ.நா. ஏஜெண்டுகளிடம் சிக்க வேண்டாம்!

இலங்கையில் இழைக்கப்பட்ட போர்க் குற்றங்கள் மற்றும் மனித உரிமை மீறல்கள் தொடர்பான ஆதாரங்களை ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் ஆணையம் (ஷீஹிகூஷியூளீ) தீவிரமாகச் சேகரித்து வரும் நிலையில், ஒரு அபாயகரமான மோசடி அரங்கேறி வருகிறது!

யார் இவர்கள்?

ஐ.நா. மனித உரிமைகள் உயர் ஆணைய அதிகாரிகளின் பிரதிநிதிகள் என்று கூறிக்கொண்டு, போலியான அடையாள அட்டைகளுடன் பலர் சமூக வலைதளங்கள் மற்றும் நேரடித் தொடர்புகள் மூலம் இயங்கி வருகின்றனர்.

எச்சரிக்கை ஏன்?

இவர்கள் புலனாய்வுத் துறையுடன் இரகசியத் தொடர்பு கொண்டவர்களாக இருக்கலாம் என அஞ்சப்படுகிறது.

உண்மையான பாதிக்கப்பட்டோர், சாட்சியங்கள் மற்றும் ஆதாரங்கள் வைத்திருப்போர் இவர்களிடம் தகவல்களை வழங்குவது, உங்கள் உயிருக்கும் பாதுகாப்புக்கும் மிகப் பெரிய அச்சுறுத்தலாக மாறக்கூடும்.

உங்களிடமிருந்து பெறப்படும் முக்கிய ஆதாரங்கள்அனைத்தும்,அழிக்கப்படுவதற்கோ அல்லது திரிபுபடுத்துவதற்கோ வழிவகுக்கும் அபாயம் உள்ளது.

முகநூல் (Facebook) போன்ற சமூக ஊடகங்களில் 'ஐ.நா. அதிகாரி' என்ற போர்வையில்உங்களைஏமாற்றமுயற்சிக்கும் நபர்களை நீங்கள் எதிர்கொண்டால், மிகுந்த விழிப்புடன் இருங்கள்.

உண்மையில் ஐ.நா.வின் சர்வதேச விசாரணைக் குழுக்கள் மிக இறுக்கமான பாதுகாப்பு நடைமுறைகளைப் பின்பற்றுகின்றன. இலகுவில் யாரையும் அணுகி இவ்வாறான தகவல்களைக் கோர மாட்டார்கள்!

பாதுகாப்பாக இருப்பது எப்படி?

போலியானவர்கள் என்று சந்தேகம் ஏற்படும் நபர்களிடம், உங்கள் சாட்சியங்கள் அல்லது ஆதாரங்களின் ஒற்றைத் துளிகூட சென்றுவிடாமல் பாதுகாத்துக் கொள்ளுங்கள்!

இவ்வெச்சரிக்கையை அனைவரும் அறிந்து கொள்ளவும், எவரும் ஏமாறாமல் இருக்கவும் இதை உடனடியாகப் பகிருங்கள்''

இதுதான் மருத்துவரின் பதிவு. ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவை இலங்கையில் நல்லிணக்கத்தை மேம்படுத்துவது என்ற பெயரில் போர்க் குற்றங்கள் மற்றும் மனித உரிமை மீறல்கள் தொடர்பில் சாட்சியங்களைத் திரட்டிச் சேர்க்கும் ஒரு பொறிமுறையை ஏற்படுத்தியிருக்கிறது. அதன் காலப் பகுதி மேலும் இரண்டு ஆண்டுகளுக்கு நீடிக்கப்பட்டிருக்கின்றது.

இந்த நிலையிலேயே மருத்துவரின் எச்சரிக்கை வெளிவந்திருக்கிறது. இன்னும் சொல்லப்போனால் சாட்சியமளிக்க விரும்புபவர்கள் தம்மை அணுகுவதற்கு ஏற்ற வகையில் இணையத் தளத்தை ஐ.நா. ஏற்கனவே அறிமுகப்படுத்தியிருக்கிறது. அதற்கூடாகச் சென்றால் பல படிநிலை சோதனைகள், அவதானிப்புக்களுக்குப் பின்னரே சாட்சியத்தைப் பதிவு செய்ய முடியும். அதாவது சாட்சியமளிக்க விரும்புபவர் உண்மையிலேயே ஒரு சாட்சிதான் என்பதை ஐ.நா. மனித உரிமைகள் உயராணையர் அலுவலகத்தின் இலங்கை சாட்சியப் பதிவுப் பொறிமுறை அலுவலகம் உறுதிப்படுத்திக்கொண்ட பின்னர்தான் சாட்சியப் பதிவு இடம்பெறும். எனவே அது பாதுகாப்பானதாகவும் உறுதியானதாகவும் இருக்கும். இந்தநிலையில்ஏமாற்றுபவர்களிடம் கவனமாக இருக்கவேண்டியது ஒவ்வொரு தமிழர்களதும் கடமை.

**இடிமின்னல்**
(idiminnal@gmail.com)

## 37 பில்லியன்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கடன் தவணைகளின் அளவு குறித்து கோப் குழுவின் தலைவர் ஹர்ஷ டி சில்வா விசாரித்தார். சரியான புள்ளிவிவரங்களை வழங்க முடியாத அதிகாரிகளின் இயலாமை குறித்து அவர் அதிருப்தி தெரிவித்தார்.

கடன்கையகப்படுத்தல்செயல்முறைகளை திறம்பட நிர்வகிக்க மாநில கடன் மேலாண்மை அலுவலகத்திற்குள் திறமையான பணியாளர்களை பணியமர்த்துவதன் முக்கியத்துவத்தையும் அவர் குழுவில் வலியுறுத்தினார்.

## சோதனையின்றி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விஷயம் தேசிய முக்கியத்துவம் வாய்ந்த ஒன்றாக மாறியுள்ளது, இது பொது பாதுகாப்பு மற்றும் இலங்கையின் துறைமுகம் மற்றும் சுங்க அமைப்புகளின் ஒருமைப்பாட்டை பாதிக்கிறது என்று எதிர்க் கட்சிகளின் கோரிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

முன்மொழியப்பட்ட தெரவுக் குழு, கொள்கலன் விடுவிப்புகளின் சட்டபூர்வமான தன்மை குறித்து விசாரித்து, பொறுப்பானவர்களை அடையாளம் கண்டு, அனுப்பப்பட்ட பொருட்களில் ஏதேனும் சட்டவிரோத அல்லது தீங்கு விளைவிக்கும் பொருட்கள்உள்ளதாஎன்பதைத்தீர்மானிக்கும்.

இலங்கை சுங்கம் மற்றும் இலங்கை துறைமுக அதிகாரசபையின் பங்குகளையும் இது மதிப்பாய்வு செய்யும், தற்போதுள்ள சட்டங்கள் மற்றும் நடைமுறைகளின் போதுமான தன்மையை மதிப்பிடும், மேலும் எதிர்காலத்தில் இதுபோன்ற சம்பவங்களைத் தடுக்க சீர்திருத்தங்களை பரிந்துரைக்கும்.

நாடாளுமன்றசபாநாயகர்அல்லதுஅவரால் நியமிக்கப்பட்ட ஒருவர், அங்கீகரிக்கப்பட்ட அனைத்து அரசியல் கட்சிகளையும் பிரதிநிதித்துவப்படுத்தும் 30 உறுப்பினர்கள் வரை இடம்பெறும் குழுவின் தலைவராக இருப்பார். நிபுணர்களை அழைக்கவும், நாடாளுமன்றம் ஒத்திவைக்கப்படும்போது அல்லது கலைக்கப்படும்போது கூட்டங்களை நடத்தவும், இடைக்கால மற்றும் இறுதி அறிக்கைகளை சமர்ப்பிக்கவும் இந்தக் குழுவுக்கு அதிகாரம் இருக்கும்.

இந்த ஆண்டின் தொடக்கத்தில், கட்டாய ஆய்வு என அடையாளம் காணப்பட்ட 323 கொள்கலன்கள்துறைமுகங்களில்நெரிசலைக் காரணம் காட்டி, முறையான ஆய்வு இல்லாமல் விடுவிக்க அனுமதிக்கப்பட்டதாக தெரியவந்தது.

## நாணய....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பொருளாதார மறுமலர்ச்சி இலக்கை அடைவதற்கு, அதிகளவான உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு முதலீட்டாளர்களை ஈர்ப்பது அவசியம் என சுட்டிக்காட்டிய அரசுத் தலைவர், அதற்காக முதலீட்டிற்கு உகந்த சூழலை நாட்டில் உருவாக்கவேண்டும் எனவும் தெரிவித்தார்.

வீழ்ச்சியடைந்துள்ள நாட்டின் பொருளாதாரத்தை மீட்பதற்கு ஆளும்தரப்பு எடுத்துள்ளநடவடிக்கைகளைசர்வதேசநாணய நிதியத்தின் பிரதிநிதிகள் பாராட்டியதுடன், எதிர்காலத்தில் பின்பற்ற வேண்டிய நடவடிக்கைகள் குறித்து இரு தரப்பினரும் கலந்துரையாடினர் என்றும் அரசுத் தலைவர் செயலக அறிக்கை கூறுகின்றது.

இலங்கைஆளும்தரப்பின்சார்பில்தொழில் அமைச்சரும், பொருளாதார அபிவிருத்தி பிரதி அமைச்சருமான கலாநிதி அனில் ஜயந்த பெர்னாண்டோ, நிதி அமைச்சின் செயலாளர் கலாநிதி ஹர்ஷன சூரியப்பெரும, அரசுத் தலைவரின் மூத்த மேலதிக செயலாளர் அபொன்சு, அரசுத் தலைவரின் மூத்த ஆலோசகர் துமிந்த ஹூலங்கமுவ, மத்திய வங்கியின் ஆளுநர் கலாநிதி நந்தலால் வீரசிங்க உள்ளிட்ட அதிகாரிகள் குழுவினரும் சர்வதேச நாணய நிதியத்தின் சார்பாக, அதன் தூதுக்குழுத் தலைவர் இவான் பாப்பஜோர்கியோ (Evan Papageorgiou), இந்நாட்டிற்கான அதன் நிரந்தரப் பிரதிநிதி மார்த்தா வோல்டெமைக்கேல் (Martha Woldemichael) உள்ளிட்ட பிரதிநிதிகளும் கலந்துகொண்டனர்.

## தாஜுதீன்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கொலையில்அப்போதையஅரசுத்தலைவரின் குடும்பத்தினருக்கு ஆழமான தொடர்புகள் இருக்கின்றன என்ற குற்றச்சாட்டுக்களை இந்த வெளிப்பாடு மேலும் ஆழப்படுத்தியுள்ளது.

2012ஆம் ஆண்டு ரக்பி வீரரான தாஜுதீன் இறந்த இரவில் அவரது காரைப் பின்தொடர்ந்து சென்ற வாகனத்தில் கஜ்ஜா இருந்தார் என்பதை சிசிரிவி காணொளிகளைப் பார்த்து அவரது மனைவி உறுதிப்படுத்தினார் என்று அதிகாரிகள் ஏற்கனவே அறிவித்திருந்தனர். ஆனால், அது பொய், தனது தந்தைக்கும் இந்தக் கொலைக்கும் எந்தச் சம்பந்தமும் இல்லை என்று கஜ்ஜாவின் மகன் தெரிவித்திருந்தார்.

இதற்கிடையே, கஜ்ஜா மற்றும் அவரது இரண்டு குழந்தைகளின் கொலைக்குப் பயன்படுத்தப்பட்ட துப்பாக்கியை வழங்கினார் என்று இலங்கை பொதுஜன பெரமுன (ஜீஸிஇஊஊ) முன்னாள் உள்ளூராட்சி சபை வேட்பாளர் சம்பத் மனம்பேரி ஒப்புக்கொண்டார் என்றும் பொலிஸ் தரப்பில் கூறப்படுகிறது. மனம்பேரி போதைப் பொருள் கடத்திய குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டுத் தற்போது 90 நாள் தடுப்பு உத்தரவின் கீழ் தடுத்து வைக்கப்பட்டுள்ளார்,

28 வயதான வாசிம் தாஜுதீன், இலங்கையின் மிகவும் நம்பிக்கைக்குரிய ரக்பி வீரர்களில் ஒருவராகத் திகழ்ந்தவர். 2012இல் அவரது இறப்பு ஒரு விபத்துப் போன்று தோன்றியது. பின்னர் நடத்தப்பட்ட விசாரணைகளில் பெறப்பட்ட சான்றுகளின் அடிப்படையில் அது ஒரு கொலை என்று தீர்ப்பளிக்கப்பட்டது.

## போர்க்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

காணாமல்போனவர்களுக்கான அலுவலகம் (OMP) பெற்ற 16,966 வழக்குகளில் 23 காணாமல் போனவர்களை மட்டுமே கண்டுபிடித்துள்ளது என்பதையும் குழு தனியாகச் சுட்டிக்காட்டியுள்ளது.

ஆயுத மோதலின்போது நிகழ்ந்ததாகக் கூறப்படும் காணாமல் போனவர்கள் உட்பட, பலவந்தமாகக் காணாமல் போனவர்கள் தொடர்பாகக் கூறப்படும் வழக்குகளின் விசாரணை மற்றும் வழக்குத் தொடுப்பில் முன்னேற்றம் இல்லாததில் பிரதிபலிக்கும் அதிக அளவிலான தண்டனைவிலக்குரிமை குறித்த தனது கவலையையும் அது தெரிவித்தது.

அனைத்துக் காணாமல்போனவர்களின் வழக்குகளின் விரிவான மற்றும் புதுப்பிக்கப்பட்ட பதிவேட்டை ஒருங்கிணைக்கவும், காணாமல் போனவர்களைத் தேடவும், காணாமல்போனதாகக் கூறப்படும் சம்பவங்களை விசாரிக்கவும், பதிவுசெய்யப்பட்ட அனைத்து வழக்குகளிலும் பொறுப்புக்கூறலை உறுதிசெய்யவும் காணாமற்போனோருக்கான அலுவலகத்தை வலுப்படுத்தவும் குழு இலங்கையிடம் வலியுறுத்தியுள்ளது.

போர்க்குற்றங்கள் மற்றும் மனிதகுலத்திற்கு எதிரான குற்றங்களை அதன் சட்டத்தில் சேர்ப்பதற்கும், ஒரு சுயாதீனமான பொது வழக்கறிஞர் அலுவலகத்தை நிறுவுவதை விரைவுபடுத்துவதற்கும் குழு அழைப்பு விடுத்தது.

இலங்கையில் குறைந்தது 17 மனிதப் புதை குழிகள் தற்செயலாகக் கண்டுபிடிக்கப்பட்டதைப் பற்றிக் கவலைப்பட்ட குழு, திறமையான அதிகாரிகளிடையே வரையறுக்கப்பட்ட தடயவியல் திறன் மற்றும் மையப்படுத்தப்பட்ட முன்-மருத்துவம், உடற்கூறாய்வு, தரவுத்தளங்கள் மற்றும் ஒரு தேசிய மரபணு தரவுத்தளம் இல்லாததையும் குழு அடிக்கோடிட்டுக் காட்டியது.

மனிதப் புதைகுழிகளைக் கண்டுபிடித்து அடையாளம் காணவும், தோண்டி எடுக்கவும், அடையாளம் காணப்பட்ட புதைகுழிகளைத் தேடவும், தோண்டி எடுக்கவும், அடையாளம் காணப்பட்ட புதைகுழிகளைத் தேடவும், அடையாளம் காணவும், அகழ்வாராய்ச்சி செய்யவும், விசாரணை செய்யவும் ஒரு விரிவான உத்தியை உருவாக்கவும் திறமையான தேசிய நிறுவனங்களின் திறனை வலுப்படுத்துமாறு மாநிலக் கட்சியை அது வலியுறுத்தியது.

அடையாளம் காணப்பட்ட உடல்கள் மற்றும் மனித எச்சங்களை அடையாளம் காணுதல், பாதுகாத்தல் மற்றும் கண்ணியமாக அவர்களின் குடும்பங்களுக்குத் திருப்பி அனுப்புதல் ஆகியவற்றிற்காக அனைத்து திறமையான அதிகாரிகளிடமும் தடயவியல் திறனை அரசு உருவாக்கவேண்டும் என்றும் வலியுறுத்தியுள்ளது.

## என்னை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இல்லை என்பது தெளிவாகிறது.

அவர் இந்தப் பதவியை வகிப்பதற்கான தகுதிகளை பூர்த்தி செய்யாமல் அதை ஏற்றிருக்கின்றமையே அந்த ஆணைக்குழுவுக்கு இழுக்கை ஏற்படுத்தும் செயலாகும். எனது வரலாறு தொடர்பில் தெரியாமல் என்னை அவர் எச்சரிக்கின்றார்.

நான் 6 அரசுத்தலைவர்களுடன் ஊழலுக்கு எதிராக போராடியவன். நான் அங்கத்துவம் வகித்த ஆளும்தரப்பின் ஊழல் குறித்தே பேசி இரு சந்தர்ப்பங்களில் அமைச்சுப் பதவிகளை இழந்திருக்கின்றேன். எனவே அச்சுறுத்தி என்னை மௌனிக்கச் செய்ய முடியாது என்பதை ரங்க திஸாநாயக்கவிடம் தெரிவித்துக் கொள்கின்றேன்.

அவர் அந்த பதவியை வகிப்பதற்கு தகுதியற்றவர் என்பதை நிரூபிப்பதற்கான சகல நடவடிக்கைகளையும் நான் முன்னெடுப்பேன் என பகிரங்கமாகக் கூறுகின்றேன்.

மனச்சாட்சி இருந்தால் நான் உண்மைகளை வெளிப்படுத்த முன்னர் உடனடியாக பதவி விலகுமாறு அவரை வலியுறுத்துகின்றேன். இவரது பதவியை சவாலுக்குட்படுத்தி தாக்கல் செய்யப்பட்டிருந்த வழக்கு, கடந்த வாரம் மிகவும் இரகசியமாக மீளப் பெறப்பட்டுள்ளது. எனவே தற்போது அது தொடர்பிலும் பேச வேண்டிய கட்டாயம் ஏற்பட்டுள்ளது.

கடந்த ஆண்டு ஒக்டோபரில் இலஞ்ச, ஊழல்ஒழிப்புவிசாரணைஆணைக்குழுவின் பணிப்பாளர்நாயகம்பதவிவெற்றிடத்துக்கான விண்ணப்பம் கோரப்பட்டிருந்தது.

இந்தப் பதவிக்கு விண்ணப்பிப்பதற்கான முதலாவது தகுதி குற்றவியல் வழக்கு தொடர்பில் ஆகக் குறைந்தது 15 ஆண்டுகள் அனுபவம் உடைய சட்டத்தரணியாக இருக்கவேண்டும் என்பதாகும். ஆனால் ரங்க திஸாநாயக்கவுக்கு இது குறித்து ஒரு நாள் அனுபவம்கூட இல்லை. அடிப்படை தகுதிகூட அற்ற அவர், தனக்கு நிச்சயம் இந்த நியமனம்கிடைக்கும்என்றநம்பிக்கையிலேயே விண்ணப்பித்திருக்கின்றார்.

இது தொடர்பில் நான் சட்ட ரீதியாக நடவடிக்கை எடுப்பேன். எனவே அதற்கு முன்னர்கௌரவத்துடன்பதவிவிலகவேண்டும் என்று கேட்டுக் கொள்கின்றேன் என்றார்.

## சிவப்பு ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மாணவர்கள்ஆய்வகத்திற்குச்சென்றபோதுசில பொருட்களுக்கு சேதம் ஏற்பட்டிருந்ததையும் தரையில் சிவப்பு நிறப் பொருள் சிதறிக் கிடப்பதையும் கவனித்தனர்.

சிவப்பு நிறப் பொருள் மிளகாய்த் தூளாக இருக்குமோ என்று அதனைத் தொட்டு வாயில் வைத்து ருசித்துப் பார்த்துள்ளனர். ஆனால் பரவிக் கிடந்தது இரும்பு அடையாளம் காணும் இரசாயனப் பொருள். இதனால் பாதிப்படைந்த மாணவர்கள் உடனடியாக தம்புள்ளமருத்துவமனையில்சேர்க்கப்பட்டனர். அவர்களுக்கு ஆபத்து ஏதுமில்லை என்று வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

## ஐஸ் போதைப்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இடமாற்றம் செய்யப்பட்டிருந்தார். பொய் வழக்கு பதிவு செய்தல், போதைப்பொருள் கடத்தலில் ஈடுபடுபவர்களுக்கு உடந்தையாகச் செயற்படுதல், இலஞ்சம் பெறுதல் போன்ற பல குற்றச்சாட்டுக்கள் ஏற்கனவே முன்வைக்கப்பட்ட நிலையிலேயே, அவர் மணலாற்றுக்கு இடமாற்றம் செய்யப்பட்டிருந்தார் என்று கூறப்படுகின்றது.

காலைக்கதிர் ஆசிரியர்பீட
தொடர்புகளுக்கு

076 3983858

மின்னஞ்சல் முகவரி:
kalaikkathirnews@gmail.com

# தேசிய மட்ட தமிழ் மொழித்தின போட்டியில் அல் அஷ்ரக் பாடசாலைக்குத் தங்கப் பதக்கம்



(நூருல் ஹுதா உமர்)

கொழும்பு விவேகானந்தா கல்லூரியில் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற அகில இலங்கைத் தமிழ் மொழித் தின தேசிய மட்டப் போட்டியில் கல்முனை கல்வி வலய நிந்தவூர் அல் அஷ்ரக் தேசிய பாடசாலை முஸ்லிம் நிகழ்ச்சி (திறந்த போட்டி) வார்ப்பு நாடகம் நிகழ்ச்சியில் பங்கு கொண்டு தங்கப் பதக்கம் வென்று மேலுமொரு சாதனையைப் படைத்துள்ளது.

வெற்றிபெற்ற மாணவர்களுக்கும், அம் மாணவர்களை

# புத்தளம், கற்பிட்டி பகுதிகளில் விரைவில் கடற்கரை பூங்காக்கள்

(சியாஜ்)



நாடு முழுவதும் 100 சிறிய கடற்கரை பூங்காக்களைநிறுவும் திட்டத்திற்கு ஏற்ப புத்தளம்மாவட்டத்தில் 7 கடற்கரை பூங்காக்களை நிறுவ கடலோர பாதுகாப்புத் துறை நடவடிக்கை எடுத்துள்ளது.

புத்தளம் மாவட்டத்தில் முதல் சிறிய கடற்கரை பூங்காவிற்கான அடிக்கல் நாட்டு விழா மாரவில - குருசா தேவாலயத்திற்கு அருகில் சுற்றுச்சூழல் பிரதி அமைச்சர் அன்டன் ஜெயக்கொடி தலைமையில் நடைபெற்றது.

புத்தளம் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான கயான் ஜனக, ஹிருணி விஜேசிங்க, மற்றும் நாட்டாண்டியா பிரதேச சபைத் தலைவர் சாகர விஜேசேகர ஆகியோரும் இந்த நிகழ்வில் பங்கேற்றனர்.

புத்தளம் மாவட்டத்தில் மாரவில, சிலாபம், புத்தளம் மற்றும் கற்பிட்டி பகுதிகளில் 07 கடற்கரை பூங்காக்கள் க்ளீன் ஸ்ரீலங்கா திட்டத்துடன் இணைந்து செயற்படுத்த திட்டமிடப்பட்டுள்ளன.

# ஐஸ் போதைப் பொருளுடன் ஒருவர் கைது

(தில்சாத் பர்வீஸ்)

அம்பாறை மாவட்டம் கல்முனை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட நற்பிட்டிமுனை பழைய மின்சார சபை வீதியில் வைத்து ஐஸ் போதைப் பொருளுடன் சந்தேகநபர் ஒருவர் திங்கட்கிழமை கல்முனை விசேட அதிரடிப் படையினரால் கைது செய்யப்பட்டார்.

கல்முனை விசேட அதிரடிப்படை அதிகாரிகளுக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலின்பேரில்மேற்கொள்ளப்பட்டசுற்றிவளைப்பு நடவடிக்கைகளின் போது, ஐஸ் போதைப் பொருளுடன் சந்தேகநபர் ஒருவரை கல்முனை விசேட அதிரடிப் படையினர் கைது செய்துள்ளனர்.

நற்பிட்டிமுனை பகுதியைச் சேர்ந்த 23 வயது மதிக்கத்தக்க சந்தேக நபரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார். கைதுசெய்யப்பட்டபோது சந்தேகநபரிடம் இருந்து 770 மில்லி கிராம் ஐஸ் போதைப் பொருள் மீட்கப்பட்டதாகப் பொலிஸார் தெரிவித்தனர். சந்தேகநபருடன் சான்றுப்பொருட்களும் கல்முனை பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.



காலைக்கதிர்
Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## தாஜுதீனுக்கான நீதிப் பயணம் அரசியல் பாதையில் தவறக்கூடாது

இலங்கை ரக்பி உலகில் பெரும் திறமையாளராக விளங்கிய வசீம் தாஜுதீனின் இறப்பு நாட்டை அதிரவைத்த சம்பவமாகும். 2012ஆம் ஆண்டு அவர் உயிரிழந்தபோது, அது ஒரு சாதாரண வாகன விபத்தாகக் கூறப்பட்டது. ஆனால் பின்னர் வெளிவந்த ஆதாரங்களும் விசாரணைகளும், அந்த இறப்பு ஒரு பயங்கரமான கொலை என வெளிப்படுத்தின.

அதன் பின்னர் பன்னிரண்டு ஆண்டுகள் கடந்தும், வழக்கின் விசாரணை இன்றளவும் முடிவுக்கு வரவில்லை. ஒவ்வொரு மாதமும் புதிய தகவல் ஒன்று வெளிவருகிறதாயினும், நீதிமன்றங்களையும் மக்களையும் திருப்திப்படுத்தும் வகையில் எந்தத் தீர்மான முன்னேற்றமும் இதுவரை தெரியவில்லை என்பது வருத்தத்துக்குரியது.

### ‘கஜ்ஜா’ தொடர்பு

அண்மையில் குற்றப் புலனாய்வுத் திணைக்களம் (CID) மேற்கொண்டவிசாரணையில்ஒருமுக்கியதிருப்பம்ஏற்பட்டுள்ளது. விசாரணையில், அனுர விதானகமகே எனப்படும் “மித்தெனிய கஜ்ஜா” தாஜுதீனின் கார் பின் தொடர்ந்த வாகனத்தில் இருந்தார் என்று மறைகாணி (சிசிரிவி) காட்சிகள் மூலம் உறுதி செய்யப்பட்டது.

மேலும், கஜ்ஜாவை அடையாளம் காண அவருடைய மனைவி வீட்ஜொலினி சாட்சியம் வழங்கியுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது. இதனுடன், ‘பெக்கோ சமன்’ எனப்படும் குற்றவாளி கஜ்ஜாவுக்கு எதிராக நடத்திய தாக்குதல் வழக்கும் இந்தக் கொலைவழக்குடன் தொடர்புடையதாகக் கருதப்படுகிறது.

இத்தகவல்கள்வழக்கின்அடித்தளத்தைவலுப்படுத்தினாலும், நேரடி குற்றவாளிகள் யார், உத்தரவிட்டவர்கள் யார் என்ற முக்கியக் கேள்விகள் இன்னும் விடையின்றி உள்ளன. இதுவே வழக்கின் நம்பகத்தன்மையையும் நீதிமுறை நம்பிக்கையையும் சிதைக்கும் நிலையைக் கொண்டுவருகிறது.

### நாடகம் வேண்டாம்

தாஜுதீன் வழக்கு, ஒரு விளையாட்டு வீரரின் இறப்பு பற்றியதல்ல — அது அதிகாரத்தின் நிழலில் ஒடுக்கப்பட்ட உண்மையையும், சட்டத்தின் பலவீனத்தையும் வெளிப்படுத்தும் ஒரு சின்னமாக மாறியுள்ளது. இதனை ஆளும் தரப்போ அல்லது எதிர்க்கட்சியோ தமது அரசியல் பரப்புரைக்கான கருவியாக பயன்படுத்த முயலக்கூடாது.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் வழக்கைப் போலவே, இந்த வழக்கும் சில நேரங்களில் அரசியல் பேச்சுக்களின் கருப்பொருளாக மாறி விடுகிறது. இது நீதிமுறைக்கு அவமானமாகும். நீதிமன்றவிசாரணைகள்அரசியலற்றசூழலில், சட்டத்தின் வழிகாட்டுதலின் கீழ் மட்டும் நடைபெறவேண்டும்.

நீதியின் நெறி எப்போதும் தெளிவானது — ஆதாரங்களே பேசட்டும், அரசியல் குரல்கள் அல்ல.

### நீதிக்கான நம்பிக்கை

தாஜுதீன்வழக்கைமக்களும்ஊடகங்களும்மறக்கவில்லை. ஒவ்வொரு புதிய தகவலும், ஒவ்வொரு புதிய சாட்சியமும் மக்களிடையேநீதிவேண்டியஉணர்வைமீண்டும்உயிர்ப்பிக்கின்றன. ஆனால்நீதிக்கானஉண்மையானமுன்னேற்றம்காணப்படவில்லை என்பதே சோகமான நிதர்சனம்.

ஆளும்தரப்பு, காவல்துறை, நீதித்துறை — அனைவரும் ஒரே நோக்கத்துடன் செயல்படவேண்டும்: உண்மையை வெளிச்சத்துக்கு கொண்டு வருவது.

இந்த வழக்கு முடிவுக்கு வருவது ஒரே ஒரு குடும்பத்திற்கான நீதி அல்ல; அது நாட்டின் சட்ட அமைப்பின் நம்பகத்தன்மைக்கான சோதனை.

தாஜுதீனின் இறப்பை நினைவாக வைத்துக்கொண்டு, நாம் எல்லோரும் ஒரு குரல் எழுப்ப வேண்டும் —

“நீதிஅரசியலின்நிழலில்மறையக்கூடாது;அதுவெளிச்சத்திலே வாழ வேண்டும்.”

தாஜுதீன் வழக்கு நீதி பெறும்வரை, நாட்டு மனசாட்சி அமைதியடையாது.

## போக்குவரத்து சட்டங்களை மீறிய 18 மோட்டார் சைக்கிள்கள் பறிமுதல்

### சம்மாந்துறையில் சம்பவம்

(தில்சாத் பர்வீஸ், ஷிகான் பாரூக்)

பொதுப்போக்குவரத்துவிதிமுறைகளை மீறிய 18 மோட்டார் சைக்கிள்களை சம்மாந்துறை பொலிஸார் பறிமுதல் செய்துள்ளனர்.



அம்பாறை மாவட்டம் சம்மாந்துறை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பல்வேறு பகுதிகளில் திங்கட்கிழமை மாலை சுற்றிவளைப்புச் செய்யப்பட்டு சோதனை மேற்கொள்ளப்பட்டது.

இந்த நடவடிக்கையின்போது போக்குவரத்து சட்ட திட்டங்களை மீறிய குற்றச்சாட்டு மற்றும் தலைக்கவசம் அணியாமல் செல்லல், சாரதி அனுமதி பத்திரம் இல்லாமல் செல்லல், நீதிமன்ற பிடியாணைஎணப்பலர்கைதானதோடு, 18 மோட்டார்சைக்கிள்களும்சம்மாந்துறை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி தலைமையிலான குழுவினரால் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன.

இந்தச்சுற்றிவளைப்பில் சம்மாந்துறை, சவளக்கடை, மத்திய முகாம், கல்முனை ,காரைதீவு பொலிஸார் கடமையில் ஈடுபடுத்தப்பட்டனர். 220 மில்லிகிராம் ஐஸ் போதைப் பொருளை தன்வசம் வைத்திருந்த குற்றச்சாட்டில் 27 வயது சந்தேகநபர் ஒருவரும் நீதிமன்ற பிடியாணை பிறப்பிக்கப்பட்டிருந்த சந்தேகநபர் ஒருவரும் இந்தச் சுற்றிவளைப்பில் கைது செய்யப்பட்டனர்.

## கல்முனை ரோயல் வித்தியாலத்தில் காட்டு யானை அட்டகாசம்

(அப்ராஸ்)

அம்பாறை மாவட்டத்தில் அண்மைக்காலமாக காட்டு யானைகளின் அட்டகாசம் அதிகரித்து வருகிறது. இதனால் பொது மக்கள் மிகவும் சௌகரியங்களுக்கு உள்ளாகின்றனர். யானைகளினால் மக்களின் உடமைகளும் சேதமாக்கப்பட்டு வருகின்றன.

கல்முனை மாநகர சபை எல்லைக்குட்பட்ட சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்காக கல்முனை பிரதேசத்தில் அமைக்கப்பட்ட கிரீன் பீல்ட் தொடர்மாடி மக்கள் குடியிருப்பு பகுதியில் உள்ள கல்முனை ரோயல் வித்தியாலத்தில் நேற்று அதிகாலை காட்டு யானைகள் உள் நுழைந்து பாடசாலை வளாகத்தில் நடப்பட்டிருந்த மரங்களைச் சேதப்படுத்தியுள்ளன. பூச்சாடிகள் சிலவற்றையும் உடைத்துள்ளன. குடிதண்ணீர் இணைப்பு, நீர் தாங்கி குழாய் என்பவற்றையும்காட்டுயானைகள் சேதப்படுத்தியுள்ளன.





இரவு வேளைகளில் பொது மக்கள் குடியிருப்பு பகுதியில் அடிக்கடி ஊடுருவும் காட்டு யானைகள் அயலிலுள்ள வயல் வெளிகளில் கடந்த சில நாட்களாகசஞ்சரித்துத்திரிகின்றன என்று மக்கள் தெரிவித்தனர். இப்போது அவை குடியிருப்புப் பகுதிகளுக்குள்ளும் வரத் தொடங்கிவிட்டன என்று மக்கள் கவலை தெரிவித்தனர்.

இரவு நேரங்களில் குடியிருப்பு பகுதிகளுக்குக் காட்டு யானைகள் வருகை தரும் நிலை உள்ளதால் மிகவும் அச்ச நிலையில்தாம்வசித்து வருகின்றனர் என்று பொது மக்கள் மேலும் தெரிவிக்கின்றனர். இது தொடர்பில் உரிய நடவடிக்கை எடுக்குமாறு பாடசாலை சமூகம், பிரதேச மக்களும் உரிய அதிகாரிகளிடம் கோரிக்கை விடுக்கின்றனர்.

# போராட்டக்காலத்தில் மக்களை எழுச்சிகொள்ள வைத்த கலை, இலக்கியங்கள் இப்போது ஊமையாகி விட்டன

## வடக்கு மாகாண முன்னாள் அமைச்சர் ஐங்கரநேசன் ஆதங்கம்

தமிழ்த் தேசிய விடுதலைப் போராட்டத்தில் கலை, இலக்கியங்கள் அளப்பெரிய பணிகளை ஆற்றியிருக்கின்றன. போர்க்களத்தில் ஆயுதங்கள் பேசியபோது மக்கள் களத்தில் நின்று கலை, இலக்கியங்கள் பேசின. போராட்டங்களின் நியாயங்களையும், வலிகளையும் சொல்லி மக்களை எழுச்சிகொள்ள வைத்து அவர்களைத் தேசமாக ஒருங்கிணைத்ததில் கலை, இலக்கியங்கள் பெரும் பங்களிப்புகளைச் செய்தன. ஆனால், முள்ளிவாய்க்காலில் ஆயுதங்கள் மௌனித்ததோடு, எமது கலை, இலக்கியங்களும் மூச்சிழந்து விட்டன. பேசவேண்டிய விடயங்கள் இன்னும் ஏராளம் இருக்க, அவை ஊமையாக இருப்பது வருத்தமளிக்கிறது என்று தமிழ்த்தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவரும், 'வேர்முகங்கள்' நூலின் ஆசிரியருமான ஐங்கரநேசன் தனது ஆதங்கத்தை வெளிப்படுத்தினார்.



ஐங்கரநேசன் கலை, இலக்கிய ஆளுமைகளுடன் நிகழ்த்திய நேர்காணல்களின் தொகுப்பான 'வேர்முகங்கள்' நூலின் அறிமுகவிழா ஞாயிற்றுக்கிழமை முள்ளியவளை பரி-மத்தியா ஆலய மண்டபத்தில் நடைபெற்றது. இவ்விழாவில் ஏற்புரை ஆற்றியபோதே ஐங்கரநேசன் தனது ஆதங்கத்தை வெளிப்படுத்தினார். அவர் தனதுரையில் தொடர்ந்து தெரிவித்ததாவது:

தமிழ்த் தேசிய விடுதலைப் போராட்டத்தில் ஆயுதப் போராட்டம் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டுள்ளதே தவிர, போராட்டம் முடிவுக்கு வரவில்லை. போராட்டம் முளை கொண்டதற்கான காரணங்கள் இப்போதும் அப்படியே நீடிக்கும்போது, போராட்டம் முடிவுக்கு வரஇயலாது. அது சாத்தியமான வழிகளில் எல்லாம் ஜனநாயகப் போராட்டமாகத் தொடர்ந்து முன்னெடுத்துச் செல்லப்படவேண்டும்.

கெடுவாய்ப்பாக, இப்போராட்டங்கள் இன்று அரசியல்வாதிகளுக்குரிய ஒரு பணி என்பதாக மாத்திரமே சுருங்கிப் போயுள்ளது.

ஆயுதப் போராட்டத்தின் முடிவுடன் தமது பேனாக்களை மூடி வைத்துள்ள கலை, இலக்கியவாதிகள் ஜனநாயகப் போராட்டக்காலத்திலும் தமது பணிகளைத் தொய்வின்றித் தொடரவேண்டும்.



போராட்டக்காலத்தில் பேசாமடந் தைகளாக இருந்த பலர் இப்போது தமிழ்த்தேசிய வாதத்தைக் கேள்விக்குள்ளாக்கத் தலைப்பட்டுள்ளனர். இலங்கையில் இடதுசாரிகள் தலைமையிலான ஆளும்தரப்பு அமைந்துள்ள நிலையில்அவர்கள்உயிர்பெற்றுள்ளனர். போருக்குப் பின்னரானஎமதுஇளையதலைமுறையைத்தமிழ்த் தேசிய உணர்வில் இருந்து மடைமாற்றி, பெருந் தேசியவாதத்துக்குள் கரைக்கும் நிகழ்ச்சிநிரலை தெரிந்தோ தெரியாமலோ முன்னெடுத்து வருகின்றனர்.

இந்நிலையில், எமது போராட்டத்தின் நியாயங்களை, போரில் பெற்ற வெற்றிகளை, பட்ட வதைகளை எமது இளைய தலைமுறைக்கு எடுத்துச் சொல்லுவது வரலாற்றுக் கடமையாகும். அதை எமது கலைஞர்களும் இலக்கியவாதிகளும் செய்ய முன்வரவேண்டும் - என்றார்.

# பிரதிப் பொலிஸ் மா அதிபர் வவுனியாவில் இடமாற்றம்

வவுனியா மாவட்ட பிரதி பொலிஸ் மா அதிபர் சாமந்த விஜயசேகர உடன் அமுலுக்கு வரும் வகையில் இடமாற்றப்பட்டுள்ளார். வவுனியா மாவட்ட பிரதிப் பொலிஸ் மா அதிபராக செயற்பட்டு வந்த இவருக்கு மேல் மாகாணத்தின் தெற்கு பிரிவுக்கு பொறுப்பான பிரதி பொலிஸ் மா அதிபராக தேசிய பொலிஸ் சேவைகள் ஆணைக்குழுவால் நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

அவரது இடமாற்றத்தால் ஏற்பட்டுள்ள வவுனியா மாவட்ட பிரதி பொலிஸ் மா அதிபர் வெற்றிடத்திற்கு போக்குவரத்து பிரிவு பொறுப்பதிகாரியாக செயற்பட்டு வந்த பிரதி பொலிஸ் மா அதிபர் இந்திக்க கப்பு கொட்டுவ நியமிக்கப்பட்டுள்ளார்.



# சிறந்த தேயிலை தயாரிப்பு விருதினை கிறேட்வெஸ்டன் தோட்டம் வென்றது

## தொழிலாளர்களுக்கு நேற்றுப் பாராட்டு



(கேதீஸ்)

ஜப்பானில் அண்மையில் நடைப்பெற்ற சிறந்த தேயிலை தயாரிப்புக்கான 'ட்ரேகன் போல்' தங்க விருதினை தலவாக்கலை பெருந்தோட்ட கம்பனிக்குட்பட்ட கிறேட்வெஸ்டன் தோட்டம் பெற்றுக்கொண்டது. இதற்காக முன்னின்று உழைத்த தோட்ட தொழிற்சாலை உத்தியோகத்தர்கள் மற்றும் தொழிற்சாலை தொழிலாளர்களை கௌரவிக்கும் முகமாக நேற்று தலவாக்கலை பெருந்தோட்ட கம்பனியின் நிறைவேற்று பணிப்பாளர்ரொசான்இராஜதுரையினால் நினைவுச்சின்னமும் சான்றிதழ்களும் வழங்கி வைக்கப்பட்டது.

இந்நிகழ்வுகள் கிறேட்வெஸ்டன் தோட்ட பிரதி பொது முகாமையாளர் சரத் ரணவீர தலைமையில் கிறேட்வெஸ்டன் தோட்ட தொழிற்சாலையில் நடைபெற்றது. இதன்போது தலவாக்கலை பெருந்தோட்ட கம்பனியின் நிறைவேற்று பணிப்பாளர் ரொசான் இராஜதுரை, கிறேட்வெஸ்டன் தோட்ட பிரதி பொது முகாமையாளர் சரத் ரணவீர, கிறேட்வெஸ்டன்தோட்ட உதவி அதிகாரிகள் ஹெஹான் அபேவர்தன, வலகம்பாய, கிறேட்வெஸ்டன் தேயிலை தொழிற்சாலை நிர்வாகி பரமசிவம், தோட்ட பொதுநல உத்தியோகத்தர் கமல், தொழிற்சாலை உத்தியோகத்தர்கள் மற்றும் தொழிலாளர்கள் எனப் பலரும்கலந்துக்கொண்டனர்.

இலங்கையில் காணப்படும் 108 தேயிலை தோட்டங்களில் கடந்த மூன்று வருடங்களாக சிறந்த தேயிலை உற்பத்தி நிலையமாக கிறேட்வெஸ்டன் தேயிலை தொழிற்சாலை முதலாம் இடத்தில் இருந்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.



காலைக்கதிர் Kalaikkathir

# மு.கா.வின் கொழும்பு மாவட்ட இளைஞர் காங்கிரஸ் சீரமைப்பு



(சியாஜ்)

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் கொழும்பு மாவட்ட இளைஞர் காங்கிரஸ் அமைப்பொன்று கட்சியின் தலைவர் ரவுப் ஹக்கீமின் வேண்டுகோளுக்கிணங்க திங்கட்கிழமை முஸ்லிம் காங்கிரஸ், தலைமையகமான தாருஸ்ஸலாமில் தொடக்கி வைக்கப்பட்டது.

கொழும்பு மாநகரசபை உறுப்பினரும் கொழும்பு மாவட்ட அமைப்பாளருமான முன்னாள் மாகாண சபை உறுப்பினர் அர்ஷாட் நிஸாம்தீனின் தலைமையில். கொழும்பு மாவட்ட இளைஞர் காங்கிரஸ் பொறுப்பாளர் சுஹைர் அத்தாசின் வழிநடத்தலில் இளைஞர் காங்கிரஸ் புதிய பரிமாணம் பெற்றுள்ளது.

நிகழ்வின் முக்கிய அதிதியாக கட்சியின் பிரதித் தலைவர் பாராளுமன்ற உறுப்பினர் ஹிஸ்புல்லாஹ் மற்றும் சிறப்பு பேச்சாளராக புத்தளம் மாவட்ட முன்னாள் வடமேல் மாகாண சபை உறுப்பினர் நியாஸ் கலந்து சிறப்பித்தனர்.

கல்வியின் மூலம் சமுதாயத்தை வலுப்படுத்துதல் வேலைவாய்ப்புகளை பெற வழிகாட்டுதல் சுகாதாரம் மற்றும் விளையாட்டுத்துறையை மேம்படுத்துதல்,இளைஞர்களை ஆபத்தானபோதைப்பொருள்களிலிருந்து பாதுகாத்தல் போன்ற இன்னோரன்ன வேலைத் திட்டங்களை துரிதமாக நடைமுறைப்படுத்த இவ்வமைப்பு திடசங்கட்பம் பூண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது

# இரு மோட்டார் சைக்கிள்கள் நேருக்கு நேர் மோதி விபத்து

## இருவர் காயம்



(கிஷாந்தன்)

இரண்டு மோட்டார் சைக்கிள்கள் நேருக்கு நேர் மோதிக்கொண்ட விபத்தில் மோட்டார் சைக்கிள் சாரதிகள் இருவர் காயமடைந்து கொட்டகலை பிரதேச வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர் என்று திம்புள்ள பத்தனை பொலிஸார் தெரிவித்தனர்.

ஹட்டனில் இருந்து கொட்டகலை நோக்கி பயணித்த மோட்டார் சைக்கிள், அதே திசையில் பயணித்த முச்சக்கர வண்டியை முந்திச் செல்ல முயன்றபோது, எதிர் திசையில் வந்த மோட்டார் சைக்கிள் மீது மோதியதாக திம்புள்ள பத்தனை பொலிஸார் தெரிவித்தனர்.

விபத்தில் இரண்டு மோட்டார் சைக்கிள்களும் பலத்த சேதமடைந்துள்ளன. விபத்து குறித்து திம்புள்ள பத்தனை பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.



காலைக்கதிர் Kalaikkathir

# வெடுக்குநாறிமலை ஆதி சிவன் ஆலய முன்னாள் நிர்வாகிகள் விசாரணைக்கு

## சி,ஐ.டி. அழைப்பு

வெடுக்குநாறி மலை ஆதி சிவன் ஆலயத்தின் முன்னாள் தலைவர் மற்றும் செயலாளர் ஆகியோரை விசாரணைக்கு வருமாறு பயங்கரவாத தடுப்பு விசாரணைப் பிரிவு பொலிசார் அழைத்துள்ளார்கள்.

வவுனியா, நெடுங்கேணி பொலிசார் ஊடாக குறித்த அழைப்பாணைக்கடிதங்கள்திங்கட்கிழமைவழங்கப்பட்டன. வெடுக்குநாறி மலை ஆதிலிங்கேஸ்வரர் ஆலயத்தின் முன்னாள் தலைவர் சசிகுமார் செயலாளர் தமிழ்ச்செல்வன் ஆகியோர் பயங்கரவாத தடுப்புபிரிவின்விசாரணைக்காகஒக்டோபர் 9 வவுனியாவுக்கு அழைக்கப்பட்டுள்ளனர்.

வாக்குமூலம் ஒன்றை பெறுவதற்காகவே குறித்த இருவரையும் வருகை தருமாறு அழைப்பாணை கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. கடந்த வருடம் சிவாரத்திரி தினத்தன்று குறித்த இருவரும் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டு பின்னர் நீதிமன்றத்தால் விடுவிக்கப்பட்டிருந்தனர். அதன் பின்னர் ஆலயத்திற்கு புதிய நிர்வாகம் தெரிவு செய்யப்பட்டுவிட்டபோதும் பழைய நிர்வாகிகள் விசாரணைக்கு அழைக்கப்பட்டுள்ளனர்.

# சிவதாபுரம் பெருமாள் திருக்கோவிலில் புரட்டாசி 3ஆவது சனி பக்தி மாமேளம்

சேலம் மாவட்டம் சிவதாபுரம் மலங்காட்டான் தெருவில் அமைந்துள்ள அருள்மிகு ஸ்ரீ கோதண்ட பெருமாள் திருக்கோவிலில், புரட்டாசி மாதத்தின் மூன்றாவது சனிக்கிழமையையொட்டி (04) நடைபெற்ற சிறப்பு பூசை மற்றும் தெருவீதிஉலா, பக்தர்களின் மனங்களை ஆனந்தத்தில் ஆழ்த்தியது.

திருப்பணியால் அழகுபெற்ற பெருமாள் திருவேந்தியில் அற்புதமான அலங்காரத்தில் வீதி வலம் வந்தபோது, 'கோவிந்தா! கோவிந்தா!'என பக்தர்கள் முழங்கியதுடன், ஆன்மிகத் திருவிழா பக்தி வெள்ளமாக மாறியது.

மதியம் முதல் இரவுவரை தொடர்ந்து நடைபெற்ற அன்னதான நிகழ்வில் 2000க்கும் மேற்பட்ட பக்தர்கள்பங்கேற்று அருள்பெற்றனர். பெருமாளின் கருணையால் நிறைந்த இந்த திருவிழா, அனைவரின் இதயத்திலும் அமைதியும் ஆனந்தமும் ஊட்டியது.

இந்நிகழ்வு ஊரின் ஒற்றுமை, பக்தி, தன்னலமற்ற சேவை ஆகியவற்றின் சிறந்த வெளிப்பாடாக அமைந்தது. அனைவரின் உள்ளங்களிலும் 'ஸ்ரீ கோதண்ட பெருமாள் அருளொளி என்றும் ஒளிரட்டும்!' என்பதே பக்தர்களின் ஒரே பிரார்த்தனையாக இருந்தது.






# கோறளை மத்தி திண்மக்கழிவுகளை அகற்றப் பிரதேச சபை நடவடிக்கை

## தவிசாளர் சுதாகரன் தெரிவிப்பு

(பர்ஸான்)

கோறளைப்பற்று மத்தி பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட வாழைச்சேனை, செம்மண்ணோடை, மாவடிச்சேனை, பிறைந்துரைச்சேனை ஆகிய பகுதிகளில் குவியும் திண்மக் கழிவுகளை தொடராக அகற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பிரதேச சபை தவிசாளர் சுதாகரன் தெரிவித்தார்.

இந்தப் பகுதிகளில் திண்மக்கழிவுகளை அகற்ற ஒரேயொரு உழவு இயந்திரமே இதுவரையில் சேவையில் ஈடுபட்டு வந்தது. இதனால் குறித்த பகுதி மக்கள் பெரும் அசௌகரியங்களை எதிர்நோக்கி வந்தனர். இதனைக் கருத்திற் கொண்டு தினம் தோறும் திண்மக்கழிவுகளை அகற்றத் தற்போது நான்கு உழவு இயந்திரங்கள் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளன என்று தவிசாளர் மேலும் தெரிவித்தார்.









இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House (Pvt) Ltd.நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 08.10.2025இல் வெளியிடப்பெற்றது